# செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.57/2023 நாள் : 22.07.2023

**இன்று (22.07.2023) நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்கள் ஆய்வு செய்தார்**

இன்று (22.07.2023) நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்கள் ஆய்வு செய்தார்.

நெம்மேலியில் ரூபாய் 1516 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலைய கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடல்சார் பணிகள், இயந்திரவியல் மற்றும் மின்சாரக் கருவிகள் நிறுவும் பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளது. கடல்நீரை உட்கொள்ளும் குழாய்கள் பதிக்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. சுத்திகரிக்கப்பட்ட நீர்த்தேக்கத் தொட்டி, சுத்திகரிக்கப்பட்ட நீர் உந்தும் நிலையம், கசடுகளை கெட்டிப்படுத்தும் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை முதன்மைச் செயலாளர் ஆய்வு செய்து நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் பணிகளை முடிக்க வேண்டுமென சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் குழாய் பதிக்கும் பணிகள், இடைநிலை

நீரேற்று நிலைய கட்டுமானப் பணிகள் குறித்தும் முதன்மைச் செயலாளர் ஆய்வு செய்தார். இத்திட்டத்தினால் பயன் பெறும் வேளச்சேரி, ஆலந்தூர், கோவிலம்பாக்கம், பல்லாவரம், உள்ளகரம்–புழுதிவாக்கம், மடிப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்தும் அலுவலர்களிடம் ஆய்வு செய்தார்.

மேலும், நெம்மேலியில் செயல்பட்டுவரும் 110 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் செயல்பாடுகளையும், குடிநீரின் தரத்தினையும் பரிசோதனை செய்து இந்நிலையத்தின் முழு திறனான 110 மில்லியன் லிட்டர் அளவிற்கு தினந்தோறும் குடிநீர் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.இரா.கிர்லோஷ் குமார்,இ.ஆ.ப. அவர்கள், பொறியியல் இயக்குநர், திரு.வீ.கு.இராமசாமி அவர்கள், தலைமைப் பொறியாளர் திரு.ஆர்.கந்தசாமி அவர்கள், கண்காணிப்புப் பொறியாளர் திருமதி.ஜி.பி.வைதேகி அவர்கள், செயற்பொறியாளர் திரு.எஸ்.கிருபாகரவேல் அவர்கள் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்